பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 28 | வியாழக்கிழமை 13.08.2020 | கதிர் 148

**'2020 பொதுத் தேர்தல் பற்றிய ஒரு பார்வை'** எனும் தலைப்பில் தொடர்ந்து பிரசுரமாகி வருகின்ற கட்டுரை தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று பிரசுரமாகவில்லை. நாளை தொடர்ந்து பிரசுரமாகும்.

# செஞ்சோலை நினைவேந்தலுக்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் தடை!

## கோட்டா அரசின் ஆட்டம் ஆரம்பம்



முல்லைத்தீவு, ஒகஸ்ட் 13

செஞ்சோலை படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை நடைபெறவுள்ள நிலையில் அந்த நிகழ்வுகளை நடத்த முடியாது எனப் புதுக் குடியிருப்பு பொலிஸார் தடை விதித்துள்ளனர். 2

## புதிய சபாநாயகராக மஹிந்த யாப்பா; பிரதி சபாநாயகராக சியம்பலாப்பிட்டிய



கொழும்பு, ஒகஸ்ட் 13

இம்மாதம் 20ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள 9ஆவது நாடாளுமன்ற அமர்வுகளின்போது சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவும், பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவும் நியமிக்கப்படவுள்ளனர் என அரச தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்ற நிலையில் புதிய நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அரசு தயாராகி வருகின்றது.

நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் தெரிவு குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அப்பதவிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரை நியமிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

அந்தவகையில் சபாநாயகராக மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற 2

## கஜேந்திரகுமார், கஜேந்திரன் எம்.பிக்கள் முள்ளிவாய்க்காலில் உறுதிப்பிரமாணம்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களது உறுதிப்பிரமாணம் முள்ளிவாய்க்காலில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தேசியப் பட்டியலில் தெரிவான கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகிய இருவருமே முள்ளிவாய்க்காலில் உறுதிப் பிரமாணம்செய்துகொள்ளவுள்ளனர்.

இந்த உறுதிப்பிரமாண நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## புதனன்று கோட்டா தலைமையில் புதிய அமைச்சரவையின் கூட்டம்

புதிய அமைச்சரவை எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் கூடவுள்ளது.

இக்கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 09ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வை எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு, 2

## மைத்திரிபாலவுக்கு பிரதி பிரதமர் பதவி?

கொழும்பு, ஒக 13

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதிப் பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது என அரசியல்வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசமைப்பு மறுசீரமைப்பின்மூலம் பிரதிப் பிரதமர் பதவி உருவாக்கப்படும் எனவும், இதன் காரணமாகவே மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று அமைச்சு பதவி எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

## ரணில் இப்போதைக்கு பதவி விலக மாட்டார்?

கொழும்பு,ஒக 13

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்யும் வரையில் கட்சியின் தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன எனத் தெரியவந்துள்ளது. 2

## மக்கள் மத்தியில் பிளவு ஏற்படுத்த சிலர் முயற்சி

### நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக 13

நாட்டு மக்கள் மத்தியில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்பும் எமது முயற்சியை சிலர் விரும்பவில்லை. இதற்கு காரணம் 2

## முள்ளிவாய்க்கால் மண்ணை வணங்கி கடமைகளைப் பொறுப்பேற்றார் விக்கி



யாழ்ப்பாணம், ஒக 13

தமிழ்த் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவருமான வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இன்று முள்ளிவாய்க்காலில் சுடரேற்றி தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விடத்தில் வணக்கம் செலுத்தி பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளார் எனவும், பங்கேற்க விரும்புவர்கள் தன்னுடன் இணைந்து 2

## சஜித் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனச் சண்டை முடிவுக்கு வந்தது

### 7 பேரின் பெயர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு; மனோ, ஹக்கீம், ரிஷாத் அணிகளுக்கு இடமில்லை

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஆசனங்கள் தொடர்பாக கட்சிக்குள் நிலவிய இழுபறி முடிவுக்கு வந்துள்ளது.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக 2

# மன்னாரில் காயங்களுடன் மிதந்த பெண்ணின் சடலம்




மன்னார், ஓக. 13

மன்னார் உப்பளத்துக்குச் சொந்தமான உப்பு உற்பத்திப் பாத்தியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் இன்று வியாழக்கிழமை மதியம் நீரில் மிதந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மன்னார் - சௌத்பார் ரயில் நிலைய பிரதான பாதை அருகில் காணப்படும் உப்பளத்திற்குச் சொந்தமான உப்பு உற்பத்திப் பாத்தியில் இருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை சடலம் ஒன்று சந்தேகத்திற்கு இடமான நிலையில் காணப்பட்டமையைத் தொடர்ந்து இது தொடர்பாக மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு விரைந்து வந்த மன்னார் பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இன்று மதியம் மன்னார் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்கள் முன்னிலையில் நீர் நிறைந்த பாத்தியில் இருந்து சடலம் மீட்கப்பட்டது.

பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதோடு, பெண்ணின் உடலில் பலத்த காயங்கள் காணப்பட்டமையுடன் இழுத்து செல்லப்பட்ட அடையாளங்கள், ஆண் ஒருவரின் பாதணி உட்பட சில தடயப் பொருள்களையும் சம்பவ இடத்தில் இருந்து விசேட தடயவியல் நிபுணத்துவப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பெண் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம் காணப்படவில்லை. மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மக்கள் மத்தியில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னவெனில் அவ்வாறானவர்கள் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி தீவிரவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதே நோக்கமாகக் கொண்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் அலிஸ் சப்ரி தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் அந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

தாம் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுள்ளமை ஒரு பிரிவைச் சார்ந்த மக்களுக்காக மாத்திரம் அல்ல என்றும் அனைத்து நாட்டு மக்களுக்குமே ஆகும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

நான் நீதி அமைச்சர் என்ற ரீதியில் செயற்படுவேன்.

நாம் ஒரு சமூகப் பிரிவினர் இந்த நாட்டை நாம் நேசிக்கின்றோம். யாராவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் மற்றும் தீவிரவாதத்துடன் தொடர்புபட்டிருப்பார்களாயின் அவர்களின் இறுதி வரையில் உள்ள அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார்.

## சஜித் கட்சியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சித் மத்துமபண்டார, இம்தியாஸ் பாகிர் மாகார், திஸ்ஸ அத்தநாயக்க, ஹரீன் பெர்னாண்டோ, மயந்த திஸாநாயக்க, எரான் விக்கிரமரத்ன மற்றும் டயனா கமகே ஆகிய 7 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெயர்ப் பட்டியலை கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இன்று அனுப்பிவைத்துள்ளார்.

சஜித் அணியின் பங்காளிக் கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தமிழ், முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவருக்கும் தேசியப் பட்டியலில் எந்தவொரு ஆசனமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வருமாறும் அவர் ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தநிலையில், இன்று முற்பகல் தனது கூட்டணிக் கட்சியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட்ட பெருமளவான ஆதரவாளர்களுடன் முள்ளிவாய்க்கால் சென்ற விக்னேஸ்வரன், அங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சுடர் தூபியில் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

## ரணில் இப்போதைக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் எனவும், புதியவர் ஒருவரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க கூறினார் என்று கட்சியின் பொதுச்செயலாளர் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இதன்படி ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம் , தயா கமகே மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோரின் பெயர்கள் தலைவர் பதவிக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன எனவும், இதன்படி கட்சித் தலைவருடன் கலந்துரையாடி இறுதி முடிவெடுத்து மத்திய செயற்குழுவுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பரிந்துரைக்கப்பட்டுள்ள 4 பேரும் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவர்கள் எனக் கட்சிக்குள்ளிருந்து எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன எனவும், இதனால் கட்சித் தலைமைப் பதவி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதால் கட்சித் தலைவர் பதவியிலிருந்து உடனடியாக விலகாது இருக்க ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்துள்ளார் எனவும் அறியமுடிந்துள்ளது.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களின் விசேட சந்திப்பு நேற்று மாலை ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க , வஜிர அபேவர்தன, தயா கமகே, அகிலவிராஜ் காரியவசம், சாகல ரத்நாயக்க, நவீன் திஸாநாயக்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது சிலர் கட்சியின் இடைக்காலத் தலைவராக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கோரிக்கைக்கு வஜிர அபேவர்தன உள்ளிட்ட சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க கட்சிக்குப் பொருத்தமான தலைவர் ஒருவரே தற்போதைக்கு அவசியம் எனத் தெரிவித்துள்ளார். இதன்படி பொருத்தமான ஒருவர் தெரிவாகும் வரையில் ரணில் பதவியில் இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதனன்று கோட்டா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய இடம்பெறவுள்ளது. இம்முறை பார்வையிட வரும் விருந்தினர்களின் எண்ணிக்கை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான நெருங்கிய நபர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## புதிய சபாநாயகராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளார் எனவும், பிரதி சபாநாயகராக கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நியமிக்கப்படவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செஞ்சோலை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தின் மீது 2006 ஒகஸ்ட் 14 அன்று இலங்கை விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நினைவேந்தல் நிகழ்வு வருடந்தோறும் வள்ளிபுனம் இடைக்கட்டுச் சந்தியில் நினைவேந்தல் குழுவால் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வருடம் நாளை காலை நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஏற்பாட்டாளர்களை நேற்று பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது எனவும் அவ்வாறு நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள் எனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் இருண்ட யுக ஆட்சி

'முதற்கோணல் முற்றிலும் கோணல்' என்பார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசின் ஆரம்ப அடி அப்படி ஒரு கோணல் திசையை நோக்கிய சமிக்ஞையைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ராஜபக்ஷக்களின் 2005 – 2015 கால ஆட்சியை 'இருண்ட யுக ஆட்சி' என்றுதான் வரலாறு பதிவு செய்கின்றது.

கடந்த காலத் தவறுகளை அனுபவப் பாடங்களாகக் கொண்டு அவற்றைக் களைந்து நீதியான அரசு ஒன்றை நிலைநாட்டுவோம் என்று ஆட்சி அமைத்துள்ள பொதுஜன முன்னணியின் – மொட்டுக் கட்சியின் – தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ கூறினாலும், அது நடைமுறையில் வருமா என்பது சந்தேகமே.

உறுதி மொழிகளை வெறும் வாய் வார்த்தை ஜாலங்களுடன் முன்வைப்பதில் அர்த்தமில்லை. சொல்லிலும் செயலிலும் அது உண்மையாக நடைமுறைப்பட வேண்டும்.

எது, எப்படி என்றாலும் சட்டம், சட்டம்தான். சட்டத்துக்கு விரோதமாக – அதுவும் நாட்டின் மீயுயர் சட்டத்துக்கு மாறாக – நாட்டின் ஜனாதிபதி கூட நடக்க முடியாது; நடக்கக் கூடாது.

ஆனால் அதிகாரமும், ஆட்சியும் முழுமையாகத் தமது கைக்கு வந்து விட்டது என்ற ஆணவத்திமிரில் ராஜபக்ஷக்கள் அப்படித் தான் நடக்கின்றார்கள்.

அதுவும் அரசமைப்பு ஏற்பாடுகளைத் துச்சமென மதித்து தூக்கி எறிந்து நடக்கின்றார்கள்.

புதிய அரசின் பதவி ஏற்பிலேயே இந்த அராஜகப் போக்கு அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கின்றது.

'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்ற மாதிரி அராஜக ஆட்சி இனிமேல் கட்டவிழ்ப் போகின்றது என்பதை உறுதிப்படுத்துமாற்போல, அரசமைப்பு மீறல் நடவடிக்கை ஆரம்பத்திலேயே களை கட்டி விட்டது.

அமைச்சுக்கள் ஒதுக்கீடு சம்பந்தமாக அரசமைப்பு தெளிவான சில ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவோம் என்று தெரிவித்து, அதனை ஒரு கோஷமாக முன்நிறுத்தி, தேர்தலில் போட்டியிட்ட மொட்டுக் கட்சியினருக்கு, மக்கள் அங்கீகாரம் வழங்குமாற்போல தேர்தல் வெற்றியை வழங்கியிருந்தாலும் கூட, அந்தத் தேர்தல் முடிவை வைத்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் செயலிழந்து விட்டது என்று கூறிவிட முடியாது. சட்ட நிலைமைக்கு அமைய அது உரிய வழி முறையில் நீக்கப்படும் வரை அந்த அரசமைப்பு ஏற்பாடு முழு அளவில் நடைமுறையில் இருக்கும். அதையும் சேர்த்து அரசமைப்பு ஏற்பாடுகளைப் பின்பற்றி நிற்போம் என்று உறுதியுரை தெரிவித்துத்தான் ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை சத்தியப் பிரமாணம் செய்து பதவி வகிக்கின்றார்கள்.

ஆகவே 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் எதிர்காலத்தில் மாற்றப்படலாம்; அல்லது அடியோடு நீக்கப்படலாம். ஆனால் இப்போது வரை அது நடைமுறையில்தான் இருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதி முதல் அனைவரினதும் கடமை, பொறுப்பு. அதைத் தட்டிக் கழிக்க முடியாது.

அரசமைப்பைப் பொறுத்தவரை இரண்டு விடயங்கள் உள்ளன. அதில் கூறப்பட்ட ஷரத்துக்களை நடைமுறைப்படுத்தத் தவறுவது ஒன்று. முரணாக நடப்பது மற்றொன்று.

இதில் பின்னான விடயம் – அரசமைப்புக்கு முரணாக நடப்பது என்பது – முற்றும் முழுதாக ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்.

அதைத்தான் கோட்டாபய அரசு இந்த அமைச்சரவை பதவியேற்புடன் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்திருக்கின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டுள்ளன. ஆனால் கடந்த 33 ஆண்டுகள் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது அரசமைப்பில் கூறப்பட்ட விடயம் செயற்படுத்தப்படாமைக்கு உதாரணம்.

ஆனால், 19 ஆவது திருத்தத்தில் , அமைச்சரவை ஒதுக்கீடு தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடந்து கொண்டிருக்கின்றார்.

19 ஆவது திருத்தத்தின் கீழ், அது கொண்டுவரப்பட்ட சமயத்தில் ஜனாதிபதியாக இருப்பவர் மட்டும் (மைத்திரிபால சிறிசேன மட்டும்) பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி போன்ற அமைச்சுக்களை தன் வசம் வைத்திருக்க இடமளிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் வரும் எந்த ஜனாதிபதியும் எந்த அமைச்சையும் தன்வசம் வைத்திருக்க முடியாது என 19 ஆவது திருத்தத்தின் 51 ஆவது ஷரத்து மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுகின்றது.

ஆனால், இந்த அரசமைப்பு ஏற்பாட்டு விதிகளைத் தூக்கிக் கடாசி விட்டுத் தம்பாட்டில் பாதுகாப்பு அமைச்சைத் தம்வசம் என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அதேபோன்று, நாட்டின் தேசியக் கொடியின் வடிவம் யாது என்பது அரசமைப்பில் உரிய மாதிரிப் பட வடிவத்துடன் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பதவியேற்பின் போது அலங்கரிக்கப்பட்ட தேசியக் கொடிகளில் சிறுபான்மையினரைக் குறிக்கும் வர்ண அடையாளங்கள் தேசியக் கொடியில் நீக்கப்பட்டிருந்தன. இதுவும் பாரதூரமான அரசமைப்பு மீறலாகும்.

ஆரம்பத்திலேயே இவ்வாறு அரசமைப்பைத் தூக்கி எறியும் நடவடிக்கைகள் முன்னெடுப்படுகின்றமை மீண்டும் இருண்ட யுக ஆட்சி கட்டவிழ்ப் போகின்றது என்பதையே கட்டியம் கூறுகின்றன.

# அனுராதபுரம் புனித தலங்களுக்கு பிரதமர் மஹிந்த சென்று வழிபாடு!





புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது கடமைகளை பொறுப்பேற்றதை தொடர்ந்து அனுராதபுரம் ஸ்ரீ மஹா போதி, ருவன்வேலி சாய உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்து வழிபட்டு நல்லாசி பெற்றுக் கொண்டார்.

இதன்போது விசேட அனுசாசனம் நிகழ்த்திய அநுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க லங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய ரலபனாவே தம்மஜோதி தேரர், 2015 ஆம் ஆண்டு மக்கள் இழைத்த தவறை பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொடுத்து இம்முறை தேர்தலில் அப்பிழையை சரிசெய்வதற்கு மக்களே நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

மக்கள் தமது கடமையை நிறைவேற்றியது போன்று அரசாங்கம் மக்களுக்கான தமது கடமையை நிறைவேற்றுவதற்கான காலம் தற்போது எழுந்துள்ளதாகவும், நாட்டுக்கு சாதகமற்ற அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பின் மூலம் மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் கூறினார்.

தொலைதூரகிராமங்களில்உள்ளஅப்பாவி மக்கள் இந்த நாடு, தேசம் மற்றும் மதத்தை பிரதமர் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் எப்போதுமே காணப்படுவதால் அந்த நம்பிக்கை எதிர்காலத்திலும் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அனுராதபுரத்தில் உள்ள அடமஸ்தானத்திற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, யாத்திரை மேற்கொள்ளும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

தலைமைத்துவத்தை பொறுப்பேற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜெய ஸ்ரீ மகா போதிக்கு விஜயம் செய்து ஆசீ பெறுவதற்கு மறக்கவில்லை என்பதை நினைவு கூர்ந்த கலாநிதி பல்லேகம ஹேமரதன தேரர், இது இந்நாட்டு யுக புருஷர்களின் அம்சமாகும் எனவும் குறிப்பிட்டார்.

பின்னர், புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுராதபுரம் ருவன்வெலி சாய தாதுகோபுரத்தை வழிபட்டு நல்லாசி பெற்றார்.

தொடர்ந்து பிரதமர், நுவர கலாவிய தலைமை சங்கநாயக்கர் ருவன்வெலி சைத்யாராமாதிகாரி சங்கைக்குரிய பல்லேகம ஹேமரதன தேரரிடம் ஆசி பெற்று, பின்னர் மிரிஸவெட்டிய மஹா விகாரைக்கு விஜயம் செய்து மிரிஸவெட்டிய மஹா விகாராதிகாரி ஈதலவெடுனு வெள ஞானதிலக தேரரிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

பின்னர் அனுராதபுரம் ஜெயந்தி மஹா விகாரைக்கு வருகை தந்த பிரதமர் ஜெயந்தி மஹா விகாரதிபதி, வட மற்றும் வடமத்திய இரு மாகாணங்களின் பிரதான சங்கநாயக்கர் கலாநிதி நுகேதென்ன பஞ்ஞானந்த தேரரை சந்தித்து ஆசீ பெற்றார்.

இந்த நிகழ்வில் ஷிரந்தி ராஜபக்ஷ, அமைச்சர்களான எஸ்.எம்.சந்திரசேன, ஹொன் சேமசிங்க, துமிந்த திசாநாயக்க, சிறிபால கம்லத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழுக்கு முதலிடம் வழங்குக மட்டு மாநகரசபை தீர்மானம்!



மட்டக்களப்பு மாநகர சபையில் நிறைவேற்றப்பட்ட 'தமிழுக்கு முதலிடம்' என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலான பிரேரணை சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 36 ஆவது அமர்வு இன்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

வழமையான சம்பிரதாயங்களுடன் ஆரம்பமான இன்றைய சபை அமர்வின்போது கடந்த அமர்வின் அறிக்கை வாசிக்கப்பட்டு சிலதிருத்தங்களுடன் அது நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு மாநகரசபையில் நிறைவேற்றப்பட்ட "தமிழுக்கு முதலிடம்" என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலான பிரேரணையொன்று மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர் வே.தவராஜாவினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதேபோன்று, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை ஊடறுத்துச்செல்லும் வீதியை மக்கள் பாவனைக்காக திறந்து விடுவதற்கான பிரேரணையொன்று உறுப்பினர் சிவம் பாக்கியநாதனால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, முதல்வரின் முன்மொழிவுகள் வாசிக்கப்பட்டு அவற்றுக்கு உறுப்பினர்களின் அனுமதி பெறப்பட்ட நிலையில் மட்டக்களப்பு ரயில் வீதிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீதிக்கு மாநகரசபையினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள 16 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு தொடர்பாக உறுப்பினர்களினால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த வீதியை அழகுபடுத்தும் வகையில் நடைபாதை மற்றும் மின்சார கம்பங்கள் உட்பட வீதியை புனரமைக்க மாநகரசபையின் 16 மில்லியன் ரூபாயினை ஒதுக்கீடு செய்யவும் அதற்கான திட்டங்களை தயாரிக்க நடவடிக்கையெடுக்கவும் சபையின் அனுமதி கோரப்பட்ட நிலையில் அதற்கு உறுப்பினர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

இதேபோன்று, புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமர், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன் 40 வருடங்களுக்குப் பின்னர் ஆளும் கட்சியொன்றில் போட்டியிட்டு வெற்றிபெற்று இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ள பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரனுக்கும் இதன் போது வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

# இயற்கையை நாம் பாதுகாத்தாலே அது எம்மை பாதுகாக்கும் - ராகுல்



இயற்கையை நாம் பாதுகாத்தால் தான் இயற்கை நம்மை பாதுகாக்கும் என காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு வரைவு தொடர்பில் ருவிட்டரில் கருத்து தெரிவித்துள்ள அவர், 'இயற்கையை நாம் பாதுகாத்தால் தான் இயற்கை நம்மை பாதுகாக்கும்.

'சுற்றுச்சூழல் ஒழுங்கு முறையை நீர்த்துப் போகச் செய்வதை மத்திய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு வரைவு அறிக்கையை உடனடியாகத் திரும்ப பெற வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை 2020 இதற்கு பொதுமக்கள் உள்ளிட்ட பல சூழலியல் ஆர்வலர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 67 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒரேநாளில் கொரோனாவால் பாதிப்பு!



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக ஒரேநாளில் 67 ஆயிரத்து 66 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 950 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 23 இலட்சத்து 95 ஆயிரத்தை கடந்துள்ளதுடன், உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 47 ஆயிரத்து 138 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 16 இலட்சத்து 95 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் 6 இலட்சத்து 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

# 2 கோடியைத் தாண்டியது கொரோனா பரிசோதனை!



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்து வரும் நிலையில், 2 கோடியே 68 இலட்சத்து 45 ஆயிரத்து 688 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று (புதன்கிழமை) மட்டும் 8 இலட்சத்து 30 ஆயிரத்து 391 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில் ' நாடு முழுவதும் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 61 ஆயிரத்து 537 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. 942 பேர் உயிரிழந்தனர்.

இதனால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 23 இலட்சத்து 96 ஆயிரத்து 638 ஆக அதிகரித்தது. கொரோனா தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கையும் 46 ஆயிரத்து 91 ஆக அதிகரித்தத்துள்ளது.

நோய்த்தொற்றுக்காக 6 இலட்சத்து 53 ஆயிரத்து 622 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தோரின் விகிதமும் 1.98 ஆக குறைந்துள்ளது' இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

# சுதந்திரதினத்தைச் சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிடுகின்றனர்



சுதந்திர தினக் கொண்டாட்டத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, நாட்டின் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எல்லைப் பாதுகாப்புப் படையினர் பலத்த பாதுகாப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு எல்லைகளைக் கண்காணித்து வருகின்றனர்.

மும்பையில் கடல்வழியாகத் தீவிரவாதிகள் ஊடுரு வியமையைப் போல் இந்திய பாகிஸ்தான் எல்லையில் பாயும் செனாப் நதி வழியாகப் படகுகள் மூலமும் தீவிரவாதிகள் ஊடுருவலாம் என்பதனால், நதிக்கரைகளில் முகாம் அமைத்து படைவீரர்கள் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவின் சுதந்திர தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்த ஆண்டு கொரோனா தொற்றைக் கருத்திற்கொண்டு சமூக இடைவெளியைப் பின்பற்றி பாதுகாப்பான முறையில் விழாவை நடத்த ஏற்கனவே மத்திய அரசு வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

அதைப் பின்பற்றி விழாவை நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் பல்வேறு கட்டுப்பாடுகளை வகுப்பது தொடர்பாக அரசு அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஒவ்வொரு செவ்வாயும் புதுச்சேரியில் ஊரடங்கு!

புதுச்சேரி மாநிலத்தில் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் முழு நேர ஊடரங்கு அமுல்படுத்தப்படும் என அம்மாநிலத்தின் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேச பேரிடர் மேலாண்மைக் குழு கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் நாராயணசாமி வெளியிட்டுள்ள காணொளி காட்சியில் புதுச்சேரியில் ஏற்கனவே இருந்த கடைகள் நாளை முதல் காலை 6 மணியில் இருந்து இரவு 7 மணி வரை திறந்திருக்க அனுமதி என்று மாற்றப்படுவதாக நாராயணசாமி குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளில் முழு ஊரடங்கு அமுலுக்கு வரும் என்றும் அன்று எந்தவித தளர்வுகளும் கிடையாதென்றும் அவர் அறிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் தேர்தல் தொடர்பாகவா நளினியும் முருகனும் பேசப்போகின்றனர்?

## தமிழக அரசிடம் உயர்நீதிமன்று கேள்வி



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குறித்தா நளினியும் முருகனும் பேசப்போகிறார்கள் என உயர் நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள நளினியும் முருகனும் உறவினர்களிடம் காணொளி தொடர்பாடல் மூலம் பேச அனுமதி கோரிய வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு நேற்று (புதன்கிழமை) நீதிபதி கிருபாகரன் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, நளினியையும் முருகனையும் பேச அனுமதித்தால், பன்னோக்கு விசாரணை முகாமையின் விசாரணைக்கு இடையூறாக அமையும் எனத் தமிழக அரசு தெரிவித்தது.

இதையடுத்து, அமெரிக்க அதிபர் தேர்தல் பற்றியா நளினியும் முருகனும் பேசப்போகிறார்கள்? குடும்பத்தினரிடம் நளியும் முருகனும் பேசுவதில் என்ன பாதுகாப்புக் குறைபாடு ஏற்படப் போகிறது என நீதிபதி கிருபாகரன் தலைமையிலான அமர்வு கேள்வி எழுப்பியுள்ளது.

# அமேசன் காட்டுத் தீயை கட்டுப்படுத்தாவிட்டால் முதலீடுகள் முடங்கும் – பிரேசிலுக்கு எச்சரிக்கை

பிரேசிலின் அமேசன் மழைக் காடுகளில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்தாவிட்டால், 2 டிரில்லியன் டொலருக்கும் அதிகமான மதிப்பிலான முதலீடுகளை திரும்பப் பெறப்போவதாக சர்வதேச முதலீட்டாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை அதிகரிக்க, அமேசன் காடுகள் அழிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுவரும் நிலையில், இந்த ஒகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து 10 நாள்களில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நாட்டின் முதல் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இன்பேவின் தரவுகளின்படி, இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஒகஸ்ட் முதல் ஆறு நாள்களில் அமேசனில் 5 ஆயிரத்து 860 தீ விபத்துக்களை இந்த நிறுவனம் பதிவுசெய்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியிலிருந்து ஏழு சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு எரிக்கப்பட்ட சில பகுதிகள் இப்போது கால்நடை வளர்ப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றன. மேய்ச்சலுக்கு நிலத்தை அழிக்க அமேசன் முழுவதும் தீ பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை, இந்த தீ விபத்துக்கள் இயற்கையாக ஏற்படுவதில்லை எனவும், விவசாயம் மற்றும் மேய்ச்சலுக்காக சட்டவிரோதமாக மனிதர்கள் காட்டை அழிக்கிறார்கள் என்றும் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.



# கமலா ஹாரிக்கு ஒபாமா பாராட்டுதல்!

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி பதவிக்காக ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கமலா ஹாரிஸ் தெரிவு செய்யப்பட்டமை மிகச் சரியான முடிவு என முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ள அவர், அமெரிக்காவின் தற்போதைய மற்றும் எதிர்கால பிரச்சினைகளை எதிர்கொள்ள, கமலா ஹாரிஸ் எனும் சரியானவரை ஜோ பிடன் தெரிவு செய்துள்ளதாகப் பாராட்டியுள்ளார்.

இதேவேளை, கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், ஜோ பிடனுடன் இணைந்து முதன்முறையாக வொங்டனில் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது பேசிய ஜோ பிடன், கமலா ஒரு திறமையான கடினமான மற்றும் அனுபவமிக்கவர் எனக் குறிப்பிட்டமையுடன், துணை ஜனாதிபதி பதவிக்கு அவர் சரியான நபர் எனவும் புகழாரம் சூட்டினார்.

# கொரோனாத் தொற்றின் தாக்கம் நியூஸிலாந்தில் தீவிரமடைகிறது!




நியூஸிலாந்தில் மீண்டும் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், புதிதாக 14 பேருக்கு வைரஸ் தொற்று பரவியுள்ளது.

இந்த வார தொடக்கத்தில் நான்கு பேருக்குப் புதிதாக வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டமையையடுத்து, அந்தக் குடும்பத்துடன் தொடர்புடையவர்களுக்கே புதிதாக தற்போது வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்கள் அனைவரும் இப்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களின் சில தொடர்புகளும் தனிமைப்படுத்தப்படலாம்.

ஒக்லாந்து தற்போது முடக்கப்பட்டுள்ளது. ஹோட்டல்கள், மதுபான சாலைகள் மற்றும் பெரிய வணிக வளாகங்கள் ஆகியவற்றை மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒக்லாந்து மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்படுகிறார்கள். எனினும் முகக்கவசம் அணிவது கட்டாயம் ஆக்கப்படவில்லை. மத்திய அரசின் சார்பில் ஒக்லாந்து நகருக்கு 50 இலட்சம் முகக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# கொரோனா குறித்து விவாதிக்க பிரி.பிரதமர் அயர்லாந்து விஜயம்!

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், கொவிட் - 19 விவகாரம் குறித்து விவாதிக்க வடக்கு அயர்லாந்திற்கு செல்லவுள்ளார்.

ஸ்டோர்மாண்டின் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதமர் மைக்கேல் மார்டினுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

அதிகாரப் பகிர்வை மீட்டெடுக்க ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளக் கடந்த ஜனவரி மாதம், அயர்லாந்திற்கு சென்றதற்குப் பின்னர், பிரதமர் பொரிஸ் இன்று (வியாழக்கிழமை) செல்லவுள்ளார்.

மேலும், பிரதமர் பொரிஸ் ஜோன்சன், முதல் அமைச்சர் அர்லீன் ஃபோஸ்டர் மற்றும் துணை முதல் அமைச்சர மைக்கேல் ஓ நீல் ஆகியோரைச் சந்திப்பார்.

இந்தச்சந்திப்பின்போது, கொவிட் -19 தொற்றை எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளது.



இதன்படி, கொரோனா துயர் துடைப்பு பணிக்கு செல்வோர், அமெரிக்க மக்களால் நிரப்பமுடியாத பணியிடங்களில் பணிபுரிவோர், தனித்திறமை கொண்ட தொழில்நுட்பப் பிரிவினர் போன்ற பலருக்கு விலக்கு அளிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஏற்கனவே பணியில் இருப்பவர்களை நீக்கிவிட்டு புதியவர்களை பணியமர்த்த கட்டாயப்படுத்தினால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும் என்றும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்ற காரணத்தாலும் பல்வேறு தளர்வுகளை அமெரிக்கா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எச் 1 பி விசாக்கான கட்டுப்பாடு தளர்த்துகின்றது அமெரிக்க அரசு!




வேலை நிமித்தம் காரணமாக அமெரிக்கா செல்வோருக்கு வழங்கப்படும் எச் 1 பி விசாக்களுக்கான கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு தளர்த்தியுள்ளது.

கொரோனா பாதிப்பால் அமெரிக்காவில் பல இலட்சம் பேர் வேலையிழந்த நிலையில் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கும் விதமாக வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் வேலை தொடர்பானவிசாக்களுக்குஜனாதிபதிரொனால்ட் ட்ரம்ப் பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்தார்.

இதனால் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து அமெரிக்க நிறுவனங்களில் பணிபுரிய சென்ற பல இலட்சம் பேர் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும் சூழ்நிலை உருவானது.

இது குறித்து இந்திய அரசும் அமெரிக்காவிடம் தனது கவலையைத் தெரிவித்து வந்தது. இந்த நிலையில் தற்போது எச்1பி விசாக்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

# ரஷ்யாவின் தடுப்பூசியை ஆய்வு செய்ய தயாராகிறது உலக சுகாதார ஸ்தாபனம்!



கொரோனா வைரஸுக்கு எதிராக ரஷ்யா உருவாக்கியுள்ள உலகின் முதலாவது தடுப்பூசியின் சோதனை விவரங்களை ஆய்வு செய்ய ஆர்வமாக உள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம் கூறியுள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸுக்கு எதிராக தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, இஸ்ரேல் என பல நாடுகளும் களமிறங்கியுள்ளன.

அந்த வகையில் ஏறத்தாழ 165 தடுப்பூசிகளை உருவாக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், கொரோனா வைரஸுக்கு எதிராக உலகின் முதல் தடுப்பூசியை தாங்கள் உருவாக்கியுள்ளதாக ரஷ்யா நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அந்த நாட்டின் இராணுவ அமைச்சகமும், கமலேயா தொற்றுநோயியல், நுண்ணுயிரியல் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள இந்தத்தடுப்பூசிக்கு'ஸ்புட்னிக்-5'எனப்பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி, தேவையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டதாகவும் ஆற்றல் மிக்கது, பாதுகாப்பானது, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்பதெல்லாம் சோதனைகளில் நிரூபணமாகி இருக்கிறது என்று ர:ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

இந்த தடுப்பூசி உலக அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதுகுறித்து ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம், ரஷ்ய கூட்டமைப்பின், தேசிய மருந்துகள் பதிவு அமைப்பில் கொரோனா வைரஸ் தடுப்பூசி பதிவு செய்யப்பட்டுவிட்டது என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய விஞ்ஞானிகளுடனும் அதிகாரிகளுடனும் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம் என்றும் தடுப்பூசி சோதனை விவரங்களை ஆய்வு செய்ய ஆர்வமாக உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் அனைத்து முன்னேற்றங்களையும் உலக சுகாதார நிறுவனம் வரவேற்கிறது என்றும் ஐரோப்பிய ஊடக அலுவலகம் கூறியுள்ளது.

மேலும், உலகமெங்கும் இதுபோன்ற ஒவ்வொரு தடுப்பூசியும் விரைவானதாகவும் நியாயமானதாகவும் எல்லோரும்நாடுவதற்குசமவாய்ப்பினைத்தருவதாகவும் அமைய வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி தனது வசம் வைத்திருக்க முடியாது

## அரசமைப்பு மீறல் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.13

இலங்கை அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வைத்து இருக்க முடியாது என்று பி.பி.ஸி. சிங்கள சேவையின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

பி.பி.ஸி. சிங்கள சேவை இணையத்தளத்தில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டு உள்ளதாவது:-

19 ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வகிக்க ஜனாதிபதிக்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளதா என்ற கேள்வி இருந்த போதிலும், பாதுகாப்பு அமைச்சினை அரசதலைவர் கோட்டாபய ராஜபக்ஷ தனது கட்டுப்பாட்டில் வைத்து இருக்கின்றார்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் 51 ஆவது சரத்தின் கீழ், தற்போதைய ஜனாதிபதி அரசமைப்பில் கூறப்பட்டு உள்ளதைப் பொருட்படுத்தாமல், அந்த காலத்தின் இறுதி வரை, தேசிய பாதுகாப்பு, மகாவலி மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகள் என்ற விடயத்தை எடுத்துக் கொள்ளலாம். அல்லது எந்த அமைச்சுக்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவரால் தீர்மானிக்க முடியும்.

அதன்படி, அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் முடியும் வரை மட்டுமே இது போன்ற விடயங்களை நடத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# நல்லூர் ஆலய முன் வீதியில் தங்குமிட விடுதி முற்றுகை!

## 2 யுவதிகள், 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாணம்நல்லூர்ஆலய முன்வீதியில் அமைந்துள்ள தங்குமிட விடுதி ஒன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் இரண்டு தென்னிலங்கை பெண்கள் மற்றும் இரு இளைஞர்களும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நல்லூர் ஆலய முன்வீதியில் அமைந்துள்ள தங்குமிட விடுதியில் விபச்சார நடவடிக்கைகள் இடம்பெற்று வரு கின்றன என யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு இரகசிய தக வல் கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் யாழ்ப்பான தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் குறித்த தங்குமிட விடுதியை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது அந்த விடுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தங்கியிருந்த இரண்டு தென்னிலங்கைப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட பெண்கள் 20 - 25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் கொழும்பு மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நான் கிரிக்கெட்டுக்கான அமைச்சர் மட்டும் அல்லன்

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டுகின்றார்



நான் கிரிக்கெட் விளையாட்டுக்கு மட்டும் நியமிக்கப்பட்ட அமைச்சர் அல்லன் என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ தெரிவித்து உள்ளார்.

கண்டியில் உள்ள தலதா மாளிகையில் நேற்றுப் புதன்கிழமை விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சராக நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

பதவி ஏற்ற பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் சிறிலங்கா கிரிக்கெட் அணியில் தற்போது தோன்றி உள்ள நெருக்கடிக்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று அவரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த அவர், பலரும் கிரிக்கெட்டின் மறுமலர்ச்சியில் கவனம் செலுத்தினாலும் நான் கிரிக்கெட்டுக்கு மட்டும் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சர் மட்டும் அல்லன் என்பதனை முதலில் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் அனைத்து விளையாட்டுக்களுக்கும் நியமிக்கப்பட்ட ஓர்அமைச்சர் என்று தெரிவித்து உள்ளார்.

கிரிக்கெட்டுக்கு தனியாக கவனிக்கும் குழு இருப்பதாகவும், முன்னாள் வீரர்களுடன் கலந்தாலோசித்து கிரிக்கெட் விளையாட்டை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்து உள்ளார்.

# ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸிற்கு சீனா ஒரு மாத காலத் தடை

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட பல பயணிகள் கண்டுபிடிக்கப்பட்டமையை தொடர்ந்து ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸின் கொழும்பு - சங்காய் சேவைக்கு சீனா தற்காலிகத் தடை விதித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் யுஎல்866 விமானத்தில் பயணித்தவர்களில் 22 பேர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே சீனா இந்தத் தடையை அறிவித்துள்ளது.

ஒரு மாதகாலத்துக்கு இந்தத் தடை நீடிக்கும் என சீனா அறிவித்துள்ளது.

# கொரோனாவின் தாக்கம் அதிகரிப்பு நோய்த்தொற்றியல் பிரிவு எச்சரிக்கை!

பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பித்தது முதல் தற்போது வரை நாடு மிக சுறுசுறுப்பாகச் செயற்படுவதால் சமூகத்தில் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டால்கூட கொரோனா பரவுவதற்கான ஆபத்து அதிகளவில் காணப்படுவதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தனது அலுவலகத்திலிருந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அந்த பிரிவின் தலைவர் வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் பாடசாலை ஆரம்பித்தல் மற்றும் புதிய அமைச்சர்கள் கடமைகளை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகளால் மக்களின் நடமாற்றம் அதிகரித்தமையே இதற்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சூழ்நிலையில் சமூகத்தில் கொரோனா நோயாளி எவரும் அடையாளம் காணப்படாவிட்டாலும், கொரோனா தொற்று நோயாளி அல்லது நோய் தொற்று ஏற்பட்டால் அது பரவும் அபாயம் அதிகமாகவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சுகாதார வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தேசியப் பட்டியல் ஆசனம் சசிகலாவே எனது தெரிவு

## இப்படிக் கூறுகின்றார் மாவை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர் நியமனம் தொடர்பில் சம்பந்தமில்லாத தரப்பினர் தலையிட்டதும், அது தொடர்பாக அவர்கள் நடந்து கொண்ட விதமுமே அதிருப்தியளிக்கின்றது என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவிராஜ் சசிகலாவையே பிரேரிக்க இருந்தேன். எனினும், கட்சியினதும் மற்றும் பலரது அறிவுரைகளின்படியே நான் அந்த நியமனத்தைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளருமான தவராசா கலையரசன் நியமிக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எதிர்ப்பு கிளம்பியிருந்தது. அவரது நியமனம் கட்சியினால் இடைநிறுத்தப்படவில்லை. கடந்த திங்கட்கிழமை இரவு வெளியாகியிருந்த அதிவிசேட வர்த்தமானியில் கலையரசனது பெயர் இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலையரசனது நியமனத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால், அந்த முடிவை யார் எடுத்தார்கள் என்பதுதான் எமது கேள்வி. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடாமல் இந்த முடிவு சம்பந்தமில்லாதவர்களால் எடுக்கப்பட்டுள்ளது.

நான் இந்தத் தேசியப் பட்டியல் நியமனத்தைப் பெற்றுக்கொள்ள நினைத்திருக்கவில்லை. எனினும், தமிழரசுக் கட்சி மட்டத்திலும் எமது புலம்பெயர் கட்சி உறுப்பினர்கள் மட்டத்திலிருந்தும் தேசியப் பட்டியல் நியமனத்தை என்னைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறியதன் பின்னரே நான் சம்மதித்தேன்.

எனினும், நான் சசிகலா ரவிராஜையே தேசியப் பட்டியலுக்காகப் பிரேரிக்க இருந்தேன். கலையரசன் நியமிக்கப்பட்டமைக்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆயினும், அந்த முடிவை கட்சியுடன் கலந்துரையாடாமல் சம்பந்தமில்லாத தரப்பினர் நடந்துகொண்ட விதமே அதிருப்தியளிக்கின்றது.

இதேவேளை, தேசியப் பட்டியலில் பெயர் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதனை மீளப் பெறுவதா அல்லது அதனையே அமுல்படுத்துவதா என்பது தொடர்பாக நாம் கட்சி மட்டத்தில் கலந்துரையாடியே தீர்மானிக்க முடியும் - என்றார்.

# உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது வீரமுனை படுகொலை நினைவேந்தல்









வீரமுனைப் படுகொலையின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தப் படுகொலையை நினைவுகூர்ந்து வீரமுனையில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்னால் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

வீரமுனைசிந்தாயாத்திரைப்பிள்ளையார்கோயிலுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறைப் பொலிஸாரின் பாதுகாப்புடன் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வீரமுனைப் படுகொலை என்பது 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை என்னும் கிராமத்தில் 400 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட கொடூர நிகழ்வைக் குறிக்கும்.

சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த இன வன்செயல் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருட்டிண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில், ஓகஸ்ட் 12ஆம் திகதி இவற்றினுள் புகுந்த ஊர்காவல் படைக் கும்பல் ஒன்று 400 இற்கும் அதிகமான பொதுமக்களை சுட்டும் வெட்டியும் தாக்கினர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 55 பொதுமக்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. அதிகமானோர் படுகாயமுற்றனர். அவ்வேளையில் கடத்தப்பட்டோர் பற்றி எவ்வித தகவலும் இல்லை.

# புதிய அமைச்சர்களுக்கு கோட்டா அதிரடி உத்தரவு!

தற்போது அரசு நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் உட்பட, இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர்கள், தன்னுடைய ஒப்புதல் இல்லாமல் மாற்றப்படக்கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கு உரித்தான நியமனங்கள் அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பான உத்தரவை அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர அனுப்பியுள்ளார்.

அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்று காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்நிலையில், பதவிப்பிரமாணம் செய்துகொண்ட அனைத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கிய 304 பேர் நாடுமீண்டனர்!

கொரோனா தொற்று காரணமாக இலங்கைக்கு வருகை தர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 304 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டாரில் இருந்து வருகை தந்த 304 பேரே இன்று (வியாழக்கிழமை) அதிகாலை இவ்வாறு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இன்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டாரில் இருந்து 15 பேர் வருகை தந்துள்ளமையுடன் அவர்களில் 10 பேர் இலங்கையர்கள் எனவும் ஏனைய 5 பேரும் இத்தாலி மற்றும் பிரான்ஸ் தூதரகங்களில் கடமையாற்றுபவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று இன்று காலை 5.30 மணியளவில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 289 பேரும் வருகை தந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன, தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

# வவுனியாவில் விபத்து ஒருவர் படுகாயம்!

வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதவாச்சி பகுதியிலிருந்து இன்று காலை (வியாழக்கிழமை) வவுனியா நோக்கிவருகைதந்த ஓட்டோ, இரட்டைபெரியகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து வீதிக் கரையில் இருந்து மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் முச்சக்கரவண்டியின்ஓட்டோ சாரதி காயமடைந்தநிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து தொடர்பாக ஈரட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்



# ஐ.தே.கவின் மத்தியகுழு நாளை கூடுகின்றது!

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நாளை இடம் பெறவுள்ளது.

கட்சித்தலைமையகத்தில் நாளை( வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணி அளவில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் இன்றைய தினமும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கிடையில் இன்று பிற்பகல் 2 மணியளவில் சிறிகொத்தவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

# விரைவில் அறிமுகமாகும் புதிய வர்த்தகக் கொள்கை!

**பந்துல குணவர்தன தெரிவிப்பு**

புதிய வர்த்தகக் கொள்கை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் இன்று(வியாழக்கிழமை)தமது கடமைகளை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு பொருத்தமற்ற சட்டவிரோத வர்த்தக ஒப்பந்தங்களை ரத்து செய்து, மக்களின் நலனுக்காக புதிய சட்டங்களும், பிரகடனங்களும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் உத்தியோகபூர்வமாக இன்றைய தினம் கடமைகளை பெறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரவதைகளுக்குப் பயன்பட்டதா திருகோணமலை கடற்படைத் தளம்?

திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள கன்சைட் என்ற இடம் சித்திரவதைகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அந்த முகாமின் தளபதி சுமித் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு அந்த இடம் புலனாய்வு நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள கன்சைட் பகுதியை நல்லாட்சி அரசாங்கத்தில் கோட்டா முகாம் என அழைத்தனர் எனவும் சுமித் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட பகுதியில் 700 விடுதலைப்புலிகள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என நல்லாட்சி அரசாங்கத்தில் தெரிவிக்கப்பட்டது எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் என்பவரே முதலில் ஊடகங்களில் கோட்டாபய முகாம் என்பதை பயன்படுத்தினார் எனவும் சிஐடியின் முன்னாள் உத்தியோகத்தர் நிசாந்த சில்வா மற்றும் சானி அபயசேகர ஆகியோரும் கோட்டா முகாம் என கூறியிருந்தனர் எனவும்; அந்த அதிகாரி சாட்சியம் வழங்கியுள்ளார்.



# விசமிகளால் தீக்கிரை பரு. கடலட்டை வாடி!

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தும்பளை பகுதியில் வாடி அமைத்து தங்கியிருந்து கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோரது நான்கு வாடிகள் விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடலட்டை வாடியில் இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தங்கியிருந்து கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் அண்மையில் தமது சொந்த இடமான சிலாவத்தை பகுதிக்கு தமது ஊர் தேவாலயம் ஒன்றின் திருநாளுக்காகச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், அவர்கள் செல்லமுன்னர், தமது தொழில் உபகரணங்களைப் பாதுகாப்பாக ஒருவரது வீட்டில் வைத்துவிட்டுச் சென்றுள்ள நிலையிலேயே இந்த தீக்கிரையாக்கும் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இந்த சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.கட்சி தலைமைக்கு மேலும் மூவரின் பெயர்கள்!

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு மேலும் மூவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நவின் திசாநாயக்க, பாலித ரங்கே பண்டார மற்றும் ருவான் விஜேவர்தன ஆகியோரின் பெயர்களே இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பில் நேற்றைய தினம் தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் விக்கிரமசிங்க இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு தயா கமகே, அகில விராஜ் காரியவசம், ரவி கருணாநாயக்க மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இது தொடர்பில் நேற்றைய தினமும் இறுதித் தீர்மானமொன்று எட்டப்படவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு மேலும் மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகள் - ஜீவன் தொண்டமான்



லிந்துலை, பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றகையோடு கண்டியிலிருந்து நுவரெலியாவுக்கு திரும்பிய ஜீவன் தொண்டமான், முதலில் தீயினால் பாதிக்கப்பட்ட லிந்துலை பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள 24 குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறிய ஜீவன் தொண்டமான், தற்காலிகமாக தங்குமிட வசதிகளையும், அவர்களுக்கான உலர் உணவுகளையும் வழங்க பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் ஊடாகவும் ஏற்பாடு செய்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், உப தலைவர் பி.சக்திவேல், அக்கரப்பத்தனை பிரதேச சபை தலைவர் கதிர் செல்வன் ஆகியோரும் ஜீவன் தொண்டமானுடன் உடனிருந்தனர்.

# பல அமைச்சர்கள் இன்று கடமைகளை ஆரம்பித்தனர்

கொழும்பு, ஒக.13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் அமைந்துள்ள புதிய அமைச்சரவையின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பலர் இன்று (வியாழக்கிழமை) தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அதற்கமைய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, கெஹெலிய ரம்புக்வெல்ல, பவித்ரா வன்னியாராச்சி, ஜீ.எல்.பீரிஸ், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வாசுதேவ நாணயக்கார மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகிய அமைச்சர்கள் இன்றைய தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அத்தோடு இராஜாங்க அமைச்சர்களான டீ.வி சானக, சுதரனி பெர்னாண்டோபிள்ளை, நாலக கொடஹேவா மற்றும் பியல் நிஜுந்த ஆகியோரும் இன்றைய தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள 25 அமைச்சர்களும் 39 இராஜாங்க அமைச்சர்களும் கண்டி தலதா மாளிகையில் நேற்றைய தினம் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்து

பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆலோசனை கோவையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

200இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில், கல்வி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு தரத்திற்கும் வெவ்வேறு தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு அந்த கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஹி.ர்.ஆ.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளை தொடர முடியுமாயின் வழைமை போன்று மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பதில் எவ்வித தடையும் இல்லை என கல்வி அமைச்சு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

## இன்று நல்லூரில்...







**யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 20 ஆம் நாளான இன்று காலை சந்தான கோபாலர் உற்சவம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.**

படங்கள்: ஐ.சிவசாந்தன்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2020 இல் வெளியிடப்பெற்றது.